தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 372/ந/2023
நாள் 03.01.2024

திரு. K.R. சேஷாத்ரி,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
மன்னார்குடி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஹரித்ராநதி வடக்கு தெரு, கதவு எண்.17 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K.R. சேஷாத்ரி என்பவரின் 28.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.11.2023 அன்று பெறப்பட்டு 372/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, ஹரித்ராநதி வடக்கு தெரு, கதவு எண்.17 என்ற முகவரியில் வசிக்கும் திரு. K.R. சேஷாத்ரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் அதிகார வரம்பின் ஆளுகைக்குட்பட்ட, மன்னார்குடி நகரம் வார்டு 1, பிளாக் 38–ல் கர்த்தநாதபுரம், மாதாகோயில் தெருவை அடுத்துள்ள, சிதம்பரம் நகரில் (DTCP Approved) மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான பூங்கா–2 ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை மன்னார்குடி நகராட்சியின் கவனத்திற்கு கொண்டுவரவும், ஆக்கிரமிப்பு முழுமையாக நீக்கப்படவும் புகார் ஒன்றினை முதல்வரின் முகவரித்துறை வாயிலாக மன்னார்குடி நகராட்சி ஆணையர் திரு. வா.நாராயணன் அவர்களுக்கு கடந்த 21.10.2023 அன்று அளித்து, அன்றே அந்த மனு முதல்வரின் முகவரித்துறையால் 6334513 என்று எண்ணிடப்பட்டு மன்னார்குடி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டும் இருந்து வருகின்றது.

மேற்கூறிய பூங்கா ஆக்கிரமிப்பு குறித்த விபரம், இடத்தின் விபரம், வேலி வைத்து ஆக்கிரமிக்கப்பட்டும் மர, இரும்புக் கதவு போட்டு உள்ள புகைப்படங்களும் புகார் மனுவுடன் இணைத்து இருந்தேன். ஆக்கிரமிப்பு நீக்கப்படாததாலும், நகராட்சியினர் வேலி வைத்து பராமரிக்காததாலும் மீண்டும் 26.11.2023 அன்று முதல்வரின் முகவரித்துறை மூலம் மேல்முறையீடு செய்து இருந்தேன் அது தற்போது வரை நிலுவையில் இருக்கிறது.

அந்த பூங்கா, நகராட்சி பூங்காக்கள் பட்டியல் மற்றும் நகராட்சி அறிக்கைகளில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருவதாகவே பதியப்பட்டு உள்ளது என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் அந்த பூங்காவிற்கு புகார்தாரரின் பெயரில் "KR சேஷாத்திரி பூங்கா" என்று பெயர் சூட்டிட இந்த நடுவம் மன்னார்குடி நகராட்சிக்கு உரிய உத்தரவு இட வேண்டும் எனவும், ஏனெனில் மனுதாரரின் நீண்டநாள் முயற்சி காரணமாகவே இந்த பூங்கா மீட்டெடுக்கப்படப் போகின்றது, இல்லையெனில் மீட்கப்பட்டு இருக்காது, மாறாக பராமரித்து வருவதாகதான் ஆண்டறிக்கை பிரசுரிக்கப்படும். பூங்காக்கள் பட்டியல் உள்ளிட்டவைகளில் ஏற்கனவே குறிப்பிட்டு இருப்பதை போல் குறிப்பிட்டு இருப்பார்கள். ஏற்கனவே அவ்வாறு குறிப்பிட்டு வந்திருக்காவிட்டால், பூங்கா ஆக்கிரமிக்கப்பட்டே இருக்காது, எனவே இதற்கு தனியாக ஆதாரம் தேட வேண்டியது இல்லை.

எனவே, மேற்படி பூங்காவினை ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றிட ஆவன செய்யுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.12.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மன்னார்குடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

மன்னார்குடி நகராட்சி ஆணையாளர் தனது 19.12.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான வார்டு-1, பிளாக் - 38, நகரபுல எண்கள். 2817B-1,2, 2218/1,2, 2819B/1pt மற்றும் 2219B/2,3-ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு அனுமதி எண்.கொ.ஒ.ம/வ.ந.ஊ.தூ.இ (தம) எண்.661/2018 நாள் 16.10.2018-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி பூங்கா எண் -2 என ஒதுக்கீடு செய்யப்பட்ட 3084 சதுரடி பரப்பளவில் அடங்கிய இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, ஆக்கிரமிப்பாளரான திரு.வி.செல்வராஜ், காவல்துறை (ஓய்வு), பிருந்தாவன் நகர், மன்னார்குடி என்பவருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு (1) (2)-ன் கீழ் 7 நாட்களுக்குள் ஆக்கிரமிப்பினை அகற்றுமாறு 05.12.2023-ல் அறிவிப்பு வழங்கப்பட்டது.

அதன்பின்பு பூங்கா இடத்தில் ஆக்கிரமிப்பு செய்திருந்த கல்லுக்கால் முள்வேலி அடைப்பு, சிறிய தகரங்கள் மற்றும் இதர ஆக்கிரமிப்புகள் ஆகியவைகள் நகராட்சி மூலம் 19.12.2023 அன்று அகற்றப்பட்டது. சிதம்பரம் நகரில் உள்ள பூங்கா-2 இடம் நகரசார் ஆய்வாளர் மூலம் அளவீடு செய்து கல் நடப்பட்டுள்ளது.

ஆகையால், மனுவில் குறிப்பிட்டுள்ள சிதம்பரம் நகரில் உள்ள பூங்கா–2 இடம் நகராட்சி நிதி ஆதாரத்தின் முன்னுரிமை அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்றத்தின் அனுமதி பெற்று அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படும். மனுதாரர் கோரியுள்ளவாறு சிதம்பரம் நகரில் உள்ள பூங்கா–2 இடத்திற்கு மனுதாரரின் பெயரை வைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை நாள் 31.05.2022–ன்படி, முன்மொழிவுகள் அரசிற்கு அனுப்பப்பட்டு, அரசின் அனுமதி பெற்ற பின்னரே மன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும், அதன்பின்னரே உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் மன்னார்குடி நகராட்சி ஆணையரும் 20.12.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.12.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. K.R. சேஷாத்ரி 20.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''எனது முறையீட்டு மனு மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் முறையீட்டு மனுவில் கோரி இருக்கும் உத்தரவுகளை அவசியம் என்றும், அதன் காரணங்களையும் தெளிவாக எடுத்துரைத்தேன்.

எனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்ட அனைத்து பொருண்மைகளும் உண்மையே என்று உறுதி கூறுகிறேன்.

பூங்காவிற்கு வேலி வைத்து பராமரிக்கவேண்டும் என்று அதன் அவசியத்தையும் வலியுறுத்தினேன்.

முறையீட்டு மனுவின் 7 ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள கோரிக்கையான நகராட்சி பூங்காவிற்கு மனுதாரரின் பெயரை சூட்டுவது தொடர்பாக நகராட்சி தீர்மானம் இயற்றிட முறைமன்றம் பரிந்துரை செய்ய வேண்டியதன் நியாயமான காரணங்களை சட்டப்படி தெரிவித்தேன் என்று உறுதிகூறுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் சார்பாக நகரமைப்பு அலுவலராக பணியாற்றும் திருமதி. நா. சரோஜா என்பவர் 20.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''மன்னார்குடி நகராட்சிக்குச் சொந்தமான வார்டு 1 பிளாக் 38ல் அமைந்துள்ள பூங்கா நகராட்சியால் அளிக்கப்பட்ட வரைபட ஒப்புதலின்படி பூங்கா எண் 2 என ஒதுக்கீடு செய்யப்பட்ட 3084 சதுர அடி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்கின்ற மனுதாரரின் புகார் மனுவையொட்டி மேற்கண்ட பூங்கா கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கள ஆய்வில் ஆக்கிரமிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. மேற்கண்ட பூங்கா 2 நகராட்சியால் அளவீடு செய்யப்பட்டு, அங்கு கல் நடப்பட்டுள்ளது. மேலும் ஆக்கிரமிப்புதாரருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளின் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022 பிரிவு 1 மற்றும் 2 –ன் கீழ் ஆக்கிரமிப்புகளை அகற்றிட 05.12.2023 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டு, 19.12.2023 அன்று மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன என்கின்ற விவரத்தை தெரிவித்து அதன் புகைப்பட நகல்களை இம்முறைமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் மன்னார்குடி நகராட்சி ஆணையரின் 19.12.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியை சார்ந்த மனுதாரர் திரு.K.R.சேஷாத்ரி என்பவர் தனது 28.11.2023 நாளிட்ட மனுவில் மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு 1, பிளாக் 2-ல் கர்த்தநாதபுரம், சிதம்பரம் நகரில் அமைந்துள்ள மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான பூங்காவினை (பூங்கா – 2) ஆக்கிரமிப்பு செய்து வேலி மற்றும் இரும்பு கதவுகள் அமைத்துள்ளனர் எனப் புகார் தெரிவித்து, அவற்றினை அகற்றிடவும், அப்பூங்காவிற்கு மனுதாரரான தனது பெயரை வைக்கவும் ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான மேற்காணும் பூங்கா ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் சமர்ப்பித்த புகார், நகராட்சியில் பெறப்பட்டதும், நகராட்சியினர் மேற்படி இடத்தினை களஆய்வு செய்து, அப்பூங்காவில் கல்லுக்கால் முள்வேலி அமைத்து அடைக்கப்பட்டும் மற்றும் சிறிய தகரங்கள் வைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நடைபெற்றுள்ளதை உறுதி செய்து, அதனை அகற்றிடுமாறு ஆக்கிரமிப்பாளருக்கு உரிய அறிவிப்பு வழங்கப்பட்டு, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளதையும் மற்றும் அவ்விடத்தில் நகர சார் ஆய்வாளர் மூலம் அளவீடு செய்யப்பட்டு நகராட்சியால் கல் வைக்கப்பட்டுள்ளதையும் ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலம், தவிர அவர் சமர்ப்பித்த புகைப்படங்களின் மூலமும் தெரிய வருகிறது.

இருப்பினும், பூங்கா எண்.2ல் ஆக்கிரமிப்பு நடைபெற்றுள்ளதாக புகார் வரப்பெற்ற பின்னரே நகராட்சியினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை களப்பணியாளர்கள் மூலம் அவ்வப்போது களஆய்வு செய்திருப்பின் இந்நிகழ்வு நடைபெற வாய்ப்பு இருந்திருக்காது. இச்செயல்பாடு நகராட்சி ஆணையாளர், நகரமைப்பு அலுவலர், சம்பந்தப்பட்ட பணியாளர்களின் மெத்தனப்போக்கையும் மற்றும் அலட்சியத்தையுமே காட்டுகிறது. இச்செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தற்போது ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட பூங்கா இடத்தில் இவ்விடம் நகராட்சிக்கு சொந்தமானது என்றும், இவ்விடத்தில் அத்துமீறுபவர்கள் மீது உரிய சட்டவிதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என, தெளிவாக தெரியும் வகையில் ஒரு அறிவிப்புப் பலகையை உடனடியாக அமைத்திடுமாறு நகராட்சி ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. மேலும், பூங்காவினை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க, பூங்காவிற்கு வேலி அமைப்பதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

இனி வருங்காலங்களில் இதுபோன்ற ஆக்கிரமிப்புகள் நடைபெறா வண்ணம் நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிகள் ஆகியவற்றினை களப்பணியாளர்கள் மூலம் அவ்வப்போது கள ஆய்வு செய்து, எவ்வித ஆக்கிரமிப்புமின்றி தூய்மையாகவும் மற்றும் எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காத வகையிலும்

இருப்பதை உறுதி செய்திட வேண்டும் என மன்னார்குடி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான இடங்களில், அவ்விடத்திற்கு பெயர் சூட்டுவது தொடர்பான கருத்துருக்கள் நகர்மன்றம் மூலமாக அரசளவில் மட்டுமே முடிவு செய்யப்படுவதால் மனுதாரரின் பெயரிடுதல் குறித்தான கோரிக்கையை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க இயலாது என தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. K.R. சேஷாத்ரி,
எண்.17, ஹரித்ராநதி வடக்கு தெரு,
மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் – 614 001.

2) ஆணையாளர்,
மன்னார்குடி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

04/01/24

சென்னை –600 032